**15.12.2022**

**பெயர்– அன்பரசு**

**வழக்கு எண்– எச்.எம்.ஓ.பி..எண்.86/19**

**குறுக்கு விசாரணை–**

இதே நீதிமன்றத்தில் நான் விவாகரத்து கோரி இரண்டாவதாக இந்த ம னுவை தாக்கல் செய்தேன் என்றால் சாட்சி முதலில் ஆம் என்று சொல்லிவிட்டு அதற்கு பிறகு இல்லை என்று கூறினார். ஓ.பி. எண்.293/ 2017 என்ற மனுவை நான் தான் தாக்கல் செய்தேன் என்றால் சரி. நான் முதலில் தாக்கல் செய்துள்ள ஒபி.293–/17 மனுவினை என்னுடைய சுய நினைவோடு தான் தாக்கல்லெ சய்தேனா என்றால் ஆமாம் . சுயநினைவோடு தான் தாக்கல் செய்தேன். எனக்கு 2..2.2015 ல் திருமணம் நடந்தது. எனக்கு காஞ்சிபுரத்தில் மீனாட்சி திருமணம் மண்டபத்தில் திருமணம் நடந்தது எங்கள் குல வழக்கப்படி பின்ளை விட்டில் தான் திருமணம் செய்வார்கள் என்றாலும் பெண் வீட்டில் திருமண நகை மற்றும் சீர் வரிசை செய்வார்கள் என்றால் சரி. திருமணத்தின் போது எனக்கு சீர் வரிசை சாமான்கள் இருச்க்கர வாகனம் ஆகியவை கொடுத்தார்கள். எதிர்மனுதாரர் நகைகள் அணிந்து இருந்தாரா என்றால் அவர் நகை போட்டிருந்தாரா என்ற விவரம் எனக்கு தெரியாது. எனக்கு நகை எதுவும் போடவில்லையா என்றால் போடவில்லை. நான் திருமணத்தின் போது 2015ம் ஆண்டின் சுமார் 7 லட்சம் செலவு செய்தேன். நான் தாக்கல் செய்த மனுவில் திருமண செலவு எவ்வளவு என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் எனக்கு ஞாபகம்

இல்லை. நான் +2 படித்து இருக்கிறேன். அந்த மனுவில் நான் தான் கையொப்பம் போட்டேன் ஆனால் ஞாபகம் இல்லை. என்னிடம் காட்டப்படும் நான் தாக்கல் செய்துள்ள மனுவில் நான் ரூ.250000 செலவு செய்ததாக குறிப்பிட்டுள்ளேன். நான் என்னுடைய மனுவில் ரூ.2,50,000 என்று கூறிவிட்டு தற்போது சாட்சியத்தில் ரூ 7 லட்சம் என்று கூறுயிருப்பது பொய் தான் என்றால் நான் ஞாபகம் மறதியாக அவ்வாறு கூறிவிட்டேன். என் குழந்தை பிற்ந்த விவரம் எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்தள்ள மனுவில் எனக்கு 12.8.2015 ல் பெண் குழந்தை பிறந்ததாக கூறியிருந்தேன் என்றால் எனக்கு நீதிமன்றத்திற்கு வந்த பிறகு தான் பெண் குழந்தை என்ற விவரம் எனக்கு தெரியும். எந்த தேதியில் பெண் குழந்தை பிறந்தது என்றால் லேர்க் அதாலத்திற்கு சமரசம் பேச அனுப்பும்போது பக்கத்தில் பேசிகொண்டிருந்ததை வைத்து தான் எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் பிறப்பு சான்றிதழ் என்னுடைய குழற்தையுடையதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் மனைவி என்னுடன் 7 மாதம் இருந்தார். என் மனைவி என்னுடன் இருந்த 7 மாததில் நான் எந்தவித கொடுமையும் செய்யவில்லை. என் அப்பா அம்மாவும் எந்த கொடுமையும் செய்யவில்லை. என் கூட பிறந்தவர்கள் 2 ஆண் 1 பெண் ஆகும். என் மனைவி 7 ஆண்டுகள் 3 மாதமாக பிரிந்து இருக்கிறார். இதற்கிடையில் எத்தனை முறை என் மனைவியை பார்த்திருக்கிறேன் என்றால் பார்த்திருக்கிறேன். 16.5.2016ல் எனக்கு பெண் குழந்தை பிறந்திருக்கிறது என்றால் சாட்சி முதலில் சரி என்று கூறினார். அந்த தேதியில் நான் மருத்தவமனையில் கூட இருந்தேன் என்றால் சரியல்ல. திருபெரும்புதூர் குற்றவியல் நடுவர் முன்வு எம்.சி. 2/20 என்று ஜீவனாம்சம்

வழக்கை என் மனைவி தாக்கல் செய்துள்ளார் என்றால் சரி. அந்த வழக்கில் என் மனைவிக்கு நான்தான் ஆஜர் ஆனேன் என்றால் சரி. அந்த வழக்கு விசாரணையில் குழந்தை எனக்கு பிறந்ததாக நீதிமன்றத்தில் கூறியிருக்கிறேன் என்றால் சரி. நான் முதலில் போட்ட எச்.எம்.ஒ.பி.293/17 வழக்கில் என் மனைவியோடு சமரசமாக செல்வதாக கூறி அந்த வழக்கு முடிக்கப்பட்டது என்றால் சரி. அவ்வாறு ஒத்துக்கொண்டு எ்ன் மனைவி என் வீட்டில் 3 மாதம் இருந்தார் என்றால் சரி. சாட்சி பிறக 28 நாட்கள் மட்டும் வாழ்ந்தாக கூறுகிறார். மேற்படி சமரசத்திற்கு பிறகு கூட நான் என் மனைவியை என் விட்டில் வைத்து வாழவில்லை என்றாலும் மாட்டு கொட்டகையில் வைத்து தான் வாழ்ந்தேன் என்றாலும் அந்த வீட்டில் என் பெரியப்பா குடியிருந்தார் அவர் வீடு கட்டி கொண்டு வேறு இடத்திற்கு சென்றதால் அதில் நாங்கள் குடியிருந்தோம். அப்போது என் மனைவிக்கு தேவைப்படும் அடிப்படை தேவையான கேஸ் ,போன், மின்சாரம் ஆகிய வசதி எதுவும் இல்லாமல் அவரை வாழவைத்தேன் என்றாலும் சரியல்ல். அனைத்து வசதியும் செய்துகொடுத்தேன். அதன் பிறகு 5 லட்சம் பணமும் 5ச வரன் நகை கேட்டு என் மனைவியை கொடுமை படுத்தியதாக புகார் கொடுத்தாரா என்றால் புகார் கொடுத்திருந்தார். திருமணத்தின் போது என் மனைவிக்கு 35 சவரன் நகையும் எனக்கு 5 சவரன் நகை போட்டார்கள் என்றால் சரியல்ல. அந்த ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் நான் ஒத்துகொள்வேனா என்றால் அந்த ஆவணங்களில் என் பெயரில் இருந்திருந்தால் நான் ஒத்து கொள்வேன். என் மனைவிக்கும் எனக்கும் நகை மட்டும் தான் பிரச்சினை என்றாலம் வேறு கருத்து வேறுபாடு இல்லை என்றால் சரியல்ல. அவர் என்ன போடீடு கொண்டு வந்தார் என்று எனக்கு

தெரியாது. எதிர்மனுதாரர் போட்டு வந்த நகை தற்போது என்னிடம் தான் உள்ளது என்றால் சரியல்ல. நான் திருமண பத்திரிக்கையில் பி.எ. படித்திருப்பதாக போட்டிருக்கிறேன் ஆனால் படிக்கவில்லை என்றால் சரி அவ்வாறு பொய் கூறி திருமணம் செய்தேன் என்றால் சரியல்ல. அதனால் தான் என் மனைவியின் படிப்பு சான்றிதழ் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல். திருபெரும்புதூர் நீதிமன்றத்தில் கொடுத்துள்ளேன். திருபெரும்புதூ ர் திறந்தநீதிமன்றத்தில் எதிர்மனுதாரரிடம் கொடுத்துவிட்டோம். என் வீட்டில் உள்ள என் அக்கா, என் தம்பி நான் ஆகியோர் பிரிந்து வாழ்வதற்க்கு என் பெற்றோர்கள் தான் காரணம் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ விருப்பம் என்றாலும் என் பெற்றோர் தான் தடுக்கிறார் என்றால் சரியல்ல. தற்போது என் மனைவி என்னுடன் சேர்ந்து வாழ விரும்புகிறார் என்றாலும் அதற்கு நான் தயாராக இல்லை. தற்போது என் மனைவியோடு நான் தொலை பேசியில் பேசிகிறேன் என்றாலும் அவரை மருத்துவமனைக்கு அழைத்த செல்கிறேன் என்றாலும் ஒரு கணவனாக என் கடமையை செய்கிறேன் .

குறுக்கு விசாரணை தொடர்ச்சி – இந்த வழக்கின் தன்மைய கருதி இந்த நீதிமன்றம் சமரசத்திற்காக லோத் அதாலத்திற்கு பரிந்துரை செய்யப்படுகிறது.